**2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09ம் தேதி வியாழக் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள திண்டிவனம் நகர் மன்றத்தின் அவசரக் கூட்டப் பொருள்**

**முன்னிலை:- திரு.த.சௌந்தரராஜன்.பி.ஏ.,**
**தனி அலுவலர்**
**திண்டிவனம் நகராட்சி.**

1. இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை பொதுஏல உரிம இனம்–2 ஆடுவதை செய்யுமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிம இனத்திற்கு, வருவாய் ஆய்வரின் 03.09.2021ந் தேதிய குறிப்பில் தேர்வுநிலை நகராட்சிக்கு ஆடுவதை செய்ய ஆடு 1க்கு கட்டணம் ரூ.10/–ம், சாணத்தை அப்புறப்படுத்த கட்டணம் ரூ.10/–ம் நிர்ணயம் செய்யலாம் என குறிப்பு அளித்துள்ளதன் பேரில் ஆடுவதை செய்யும் இடத்தில் ஆடு 1க்கு கட்டணமாக ரூ.10/–ம், சாணத்தை அப்புறப்படுத்த கட்டணம் ரூ.10/–ம் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி கோரியும், பொது ஏல நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும், அச்சடிக்கவும், பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் ஆகும் தோராய செலவினம் ரூ.2,00,000/ற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**

அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.4835/2017/அ1)

2. இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை உரிம ஏல இனங்களுக்கு 17.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொதுஏலம் கோரப்பட்டதில், பேருந்து நிலைய கட்டண கழிவறையில் கட்டணம் வசூலிக்கும் உரிம இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. கீழ்காணும் விவரப்படி பொதுஏலத்தின் மூலம் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை பொது ஏல உரிம இனங்கள் | ஒப்பந்தப் புள்ளி/ ஏலதாரர் பெயர் | செலுத்திய டெபாசிட் தொகை விவரம் | 17.08.2021 கொடுக்கப்பட்ட ஒப்பந்த புள்ளி | 17.08.2021 கேட்கப்பட்ட உச்சஏலக் கேள்வி தொகை | கடந்த மூன்றாண்டு சராசரி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2. | 3. | 4. | 5. | 6. | 7. | 8. |
| | | இனம்–3 | | | | | |
| 1 | பேருந்து நிலைய கட்டண கழிவறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1.M.தமிழ்வாணன், க.எண்.16,ஒபிஆர் தெரு, ஒமந்துார், திண்டிவனம் . | ரூ.15000/– (D.D.No. 877578. dated 29.06.2021) | ஒப்பந்தப் புள்ளி கொடுக்க முன்வரவில்லை | உச்ச ஏலக் கேள்வி ரூ.206000/– | 2018–2019 ரூ.90000/– 2019–2020 ரூ.94500/– 2020–2021 ரூ.99225/– ------- | 17.08.2021 அன்று கேட்கப்பட்ட உச்ச ஏலக்கேள்வி கடந்த ஆண்டு கேட்பினை விட கூடுதலாகவும், கடந்த 3 ஆண்டு சராசரியை விடவும் ரூ111425/– [illegible] |
| | | 2.S.அன்பழகன், எண்.24 பெருமாள் கோயில் தெரு, திண்டிவனம். | ரூ.15000/– (D.D.No. .687333 dated 13.08.2021) | ஒப்பந்தப் புள்ளி கொடுக்க முன்வரவில்லை | **உச்சபட்ச ஏலக் கேள்வி ரூ.305000/–** | 2018–2019 ரூ.90000/– 2019–2020 ரூ.94500/– 2020–2021 ரூ.99225/– --------- | 17.08.2021 அன்று கேட்கப்பட்ட உச்ச ஏலக்கேள்வி கடந்த ஆண்டு கேட்பினை விட கூடுதலாகவும், கடந்த 3 ஆண்டு சராசரியை விடவும் **ரூ210425./–** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | மொத்தம்<br>ரூ.283725/–<br>---------<br>–<br>மூன்றாண்டுசராசரி<br>ரூ.94575/– | கூடுதலாக உள்ளது. |
| | | 3.D.வெங்கடேச பெருமாள்,<br>எண்.41<br>ராஜன்தெரு,<br>திண்டிவனம். | ரூ.15000/–<br>(D.D.No. 443733. dated 13.08.2021) | ஒப்பந்தப் புள்ளி கொடுக்க முன்வர வில்லை | உச்ச ஏலக் கேள்வி<br>ரூ.301000/– | 2018–2019<br>ரூ.90000/–<br>2019–2020<br>ரூ.94500/–<br>2020–2021<br>ரூ.99225/–<br>--------<br>--<br>மொத்தம்<br>ரூ.283725/–<br>---------<br>–<br>மூன்றாண்டுசராசரி<br>ரூ.94575/– | 17.08.2021 அன்று கேட்கப்பட்ட உச்ச ஏலக்கேள்வி கடந்த ஆண்டு கேட்பினை விட கூடுதலாகவும், கடந்த 3 ஆண்டு சரரசரியை விடவும் ரூ.206465./– கூடுதலாக உள்ளது. |
| | | 4.A.செல்வக்குமார்,<br>எண்.2<br>ரெயின்போ நகர்,<br>பெலாகுப்பம்ரோடு,<br>திண்டிவனம். | ரூ.15000/–<br>(D.D.No. 460136. dated 16.08.2021) | ஒப்பந்தப் புள்ளி கொடுக்க முன்வர வில்லை | உச்ச ஏலக் கேள்வி<br>ரூ.260000/– | 2018–2019<br>ரூ.90000/–<br>2019–2020<br>ரூ.94500/–<br>2020–2021<br>ரூ.99225/–<br>--------<br>--<br>மொத்தம்<br>ரூ.283725/–<br>---------<br>–<br>மூன்றாண்டுசராசரி<br>ரூ.94575/– | 17.08.2021 அன்று கேட்கப்பட்ட உச்ச ஏலக்கேள்வி கடந்த ஆண்டு கேட்பினை விட கூடுதலாகவும், கடந்த 3 ஆண்டு சரரசரியை விடவும் ரூ.165425./– கூடுதலாக உள்ளது |

அலுவலக குறிப்பு

இனம் –3 , பேருந்து நிலைய கட்டண கழிவறையில் கட்டணம் வசூலிக்கும் உரிம இனத்திற்கு 17.08.2021 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் 4 நபர்கள் கலந்து கொண்டு ஏலக்கேள்வி கேட்டுள்ளார்கள். அதில் வரிசை எண்.2ல் கண்டுள்ள திரு.எஸ்.அன்பழகன் என்பவரால் கேட்கப்பட்ட உச்சபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.305000/– கடந்த ஆண்டு கேட்பினை விட கூடுதலாகவும், கடந்த 3 ஆண்டு சராசரியைவிட ரூ.210425/– கூடுதலாகவும் உள்ளதால் இனம்–3 குத்தகை உரிமத்தை உச்ச ஏலக்கேள்விதாரா் திரு. S.அன்பழகன் என்பவருக்கு உரிமம் ஒப்படைப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4835/2017/அ1)

3. இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை உரிம ஏல இனங்களுக்கு 17.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொதுஏலம் கோரப்பட்டதில், நேருவீதி ஓ.பி.ஆர்.பார்க் மீன் மற்றும் இறைச்சி மற்றும் காய்கறி நாளங்காடி கடைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிம இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. கீழ்காணும் விவரப்படி பொதுஏலத்தின் மூலம் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எ ண் | குத்தகை பொது ஏல உரிம இனங்கள் | ஒப்பந்தப் புள்ளி/ ஏலதாரர் பெயர் | செலுத்திய டெபாசிட் தொகை விவரம் | 17.08.2021 கொடுக்கப் பட்ட ஒப்பந்த புள்ளி | 17.08.2021 கேட்கப்பட்ட உச்சஏலக் கேள்வி தொகை | கடந்த மூன்றாண்டு சராசரி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2. | 3. | 4. | 5. | 6. | 7. | 8. |
| | | இனம்–4 | | | | | |
| 1. | நேருவீதி ஓ.பி.ஆர். பார்க் மீன், இறைச்சி மற்றும் காய்கறி நாளங்காடி கடைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1.M.தமிழ்வாணன், க.எண்.16,ஒபிஆர் தெரு, ஓமந்துார், திண்டிவனம் . | ரூ.30000/– (D.D.No. 320258. dated 16.08.2021) | ஒப்பந்தப் புள்ளி கொடுக்க முன்வர வில்லை | உச்ச ஏலக் கேள்வி ரூ.155000/– | 2018–2019 ரூ.94500/– 2019–2020 ரூ.99225/– 2020–2021 ரூ.104186/– ---------- மொத்தம் ரூ.297911/– ---------- மூன்றாண்டு சராசரி ரூ.99304/– | 17.08.2021 அன்று கேட்கப்பட்ட உச்ச ஏலக்கேள்ளி கடந்த ஆண்டு கேட்பினை விட கூடுதலாகவும், கடந்த 3 ஆண்டு சரரசரியை விடவும் ரூ55696./– கூடுதலாக உள்ளது. |
| | | 2.A.செல்வக்குமார், எண்.2 ரெயின்போ நகர், பெலாகுப்பம்ரோடு, திண்டிவனம். | ரூ.30000/– (D.D.No. 320259. dated 16.08.2021) | ஒப்பந்தப் புள்ளி கொடுக்க முன்வர வில்லை | உச்ச ஏலக் கேள்வி ரூ.170000/– | 2018–2019 ரூ.94500/– 2019–2020 ரூ.99225/– 2020–2021 ரூ.104186/– ---------- மொத்தம் ரூ.297911/– ---------- மூன்றாண்டு சராசரி ரூ.99304/– | 17.08.2021 அன்று கேட்கப்பட்ட உச்ச ஏலக்கேள்ளி கடந்த ஆண்டு கேட்பினை விட கூடுதலாகவும், கடந்த 3 ஆண்டு சரரசரியை விடவும் ரூ70696./– கூடுதலாக உள்ளது |
| | | 3.A.இளங்கோவன், 13பி ராஜாம்பேட்டை | ரூ.30000/– (D.D.No. 460132. | ஒப்பந்தப் புள்ளி கொடுக்க முன்வர | **உச்ச பட்ச ஏலக் கேள்வி** | 2018–2019 ரூ.94500/– 2019–2020 ரூ.99225/– | 17.08.2021 அன்று கேட்கப்பட்ட உச்ச ஏலக்கேள்ளி கடந்த ஆண்டு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ட தெரு, திண்டிவனம். | dated 16.08.20 21) | வில்லை | **ரூ.17500 0/–** | 2020–2021 ரூ.104186/– --------- மொத்தம் ரூ.297911/– ---------- மூன்றாண்டு சராசரி ரூ.99304/– | கேட்பினை விட கூடுதலாகவும், கடந்த 3 ஆண்டு சராசரியை விடவும் **ரூ.75696/–** கூடுதலாக உள்ளது |

அலுவலக குறிப்பு –

இனம் –4 , நேருவீதி ஒ.பி.ஆர்.பார்க் மீன், இறைச்சி மற்றும் காய்கறி நாளங்காடி கடைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிம இனத்திற்கு 17.08.2021 அன்று நடைபெற்ற பொதுஏலத்தில் 3 நபர்கள் கலந்து கொண்டு ஏலக் கேள்வி கேட்டுள்ளார்கள். அதில் வரிசை எண்.3ல் கண்டுள்ள திரு.A.இளங்கோவன் என்பவரால் கேட்கப்பட்ட உச்சபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.175000/– கடந்த ஆண்டு கேட்பினை விட கூடுதலாகவும், கடந்த 3 ஆண்டு சராசரியை விட ரூ.75696/– கூடுதலாகவும் உள்ளதால் இனம்–4 குத்தகை உரிமத்தை உச்ச ஏலக்கேள்விதாரர் திரு. A.இளங்கோவன் என்பவருக்கு உரிமம் ஒப்படைப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

4. இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை உரிம ஏல இனங்களுக்கு 17.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொதுஏலம் கோரப்பட்டதில், சேர்மன் வைத்திலிங்கம் காய்கறி நாளங்காடி கடைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிம இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. பொதுஏலத்தின் மூலம் கீழ்காணும் விவரப்படி உச்சபட்ச ஏலக்கேள்வி கேட்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வினத்திற்கு திரு.T.ராஜசக்தி, திண்டிவனம் என்பவர் இனம்–5க்கு கேட்கப்பட்ட உச்சபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.358000/–ஐ குறைவான தொகையாக கருதி குத்தகை நிபந்தனை விதி 18 ன்படி உச்சபட்ச ஏலக்கேள்வி தொகையுடன் 25 சதவிகிதம் சேர்த்து ரூ.447500/–ஐ செலுத்தி மறுஏலம் நடத்த கோரியுள்ளதால், கூடுதல் வைப்புத்தொகை நிர்ணயம் செய்து பொதுஏலம் கொண்டு வர மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை பொது ஏல உரிம இனங்கள் | ஒப்பந்தப் புள்ளி/ ஏலதாரர் பெயர் | செலுத்திய டெபாசிட் தொகை விவரம் | 17.08.2021 கொடுக்கப் பட்ட ஒப்பந்த புள்ளி | 17.08.2021 கேட்கப்பட்ட உச்சஏலக் கேள்வி தொகை | கடந்த மூன்றாண்டு சராசரி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | | இனம்–5 | | | | | |
| 1. | சேர்மன் வைத்திலிங்கம் காய்கறி நாளங்காடி கடை | 1..A.செல்வக் குமார், எண்.2 ரெயின்போ நகர், பெலாகுப்பம்ரோடு, | ரூ.50000/– (D.D.No. 320259. dated 16.08.20 21) | ஒப்பந்தப் புள்ளி கொடுக்க முன்வர வில்லை | உச்ச ஏலக் கேள்வி ரூ.356000 /– | 2018–2019 ரூ.180000/– 2019–2020 ரூ.189000/– 2020–2021 ரூ.198450/– ------ | 17.08.2021 அன்று கேட்கப்பட்ட உச்ச ஏலக்கேள்ளி கடந்த ஆண்டு கேட்பினை விட |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | எண்.14 முதல் 36 முடிய கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 2.சுபாஷ்சந்திர போஸ் மாரியம்மன் கோயில்தெரு, திண்டிவனம். | ரூ.50000/– (D.D.No. 320269. dated 16.08.2021) | ஒப்பந்தப் புள்ளி கொடுக்க முன்வரவில்லை | உச்ச ஏலக் கேள்வி ரூ.320000 /– | 2018–2019 ரூ.180000/– 2019–2020 ரூ.189000/– 2020–2021 ரூ.198450/– —————— | 17.08.2021 அன்று கேட்கப்பட்ட உச்ச ஏலக்கேள்ளி கடந்த ஆண்டு கேட்பினை விட கூடுதலாகவும், |
| | | 3.M.தமிழ்வாணன், க.எண்.16,ஓபிஆர் தெரு, ஓமந்தூர், திண்டிவனம் . | ரூ.50000/– (D.D.No. 320257. dated 16.08.2021) | ஒப்பந்தப் புள்ளி கொடுக்க முன்வரவில்லை | உச்ச ஏலக் கேள்வி ரூ.340000 /– | 2018–2019 ரூ.180000/– 2019–2020 ரூ.189000/– 2020–2021 ரூ.198450/– —————— | 17.08.2021 அன்று கேட்கப்பட்ட உச்ச ஏலக்கேள்ளி கடந்த ஆண்டு கேட்பினை விட கூடுதலாகவும், |
| | | 4.J.ராஜேஸ்வரி, எண்.28 அப்புகுட்டிதெரு, திண்டிவன்ம் | ரூ.50000/– (D.D.No. 687338, dated 16.08.20 | ஒப்பந்தப் புள்ளி கொடுக்க முன்வர | **உச்ச பட்ச ஏலக் கேள்வி ரூ..358000 /–** | 2018–2019 ரூ.180000/– 2019–2020 ரூ.189000/– 2020–2021 ரூ.198450/– | 17.08.2021 அன்று கேட்கப்பட்ட உச்ச ஏலக்கேள்ளி கடந்த ஆண்டு கேட்பினை விட |

திரு.T.ராஜசக்தி, திண்டிவனம் என்பவர் மேற்கண்ட இனம் –5, சேர்மன் வைத்திலிங்கம் காய்கறி நாளங்காடி கடைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிம இனத்திற்கு 17.08.2021 அன்று நடைபெற்ற பொதுஏலத்தில் திருமதி.J. ராஜேஸ்வரி என்பவரால் கேட்கப்பட்ட உச்சபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.358000/– குறைவான தொகையாக கருதுவதாகவும், குத்தகை நிபந்தனை விதி 18ன்படி உச்சபட்ச ஏலக்கேள்வி தொகையுடன் 25 சதவிகிதம் கூடுதல் தொகை சேர்த்து ரூ.447500/–ஐ ( ரூ.358000/– + ரூ.89500) செலுத்துவதாக தெரிவித்து ஆணையருக்கு விண்ணப்பித்து, அதன்பேரில் ரூ.447500/–ஐ (ரூபாய் நான்கு லட்சத்து நாற்பத்தி ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) நகராட்சி கருவூலத்தில் செலுத்தி குத்தகை பொதுஏல நிபந்தனை 18ன்படி மறுஏலம் கொண்டு வர கோரியுள்ளார்.

எனவே, குத்தகை ஏல தொகைக்கு இணையாக வைப்புத்தொகை ரூ.100000/– என நிர்ணயம் செய்யவும், குத்தகை ஏல நிபந்தனை 18ன்படி மறுஏலம்/மறுஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. அனுமதிக்கலாம்.
2. குத்தகை ஏல தொகைக்கு இணையான டெபாசிட் தொகை ரூ.1,00,000/– நிர்ணயம் செய்து மன்றம் அனுமதிக்கலாம்.
3. நாளிதழில் விளம்பரம் செய்ய வும் அதற்கான செலவினம் ரூ.50,000/–ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.4835/2017/அ1

5. நகராட்சி நிர்வாக இயக்குநர், செனனை–28, அவர்களின் ந.க.எண்.14006/2021/தி2–2 நாள்.08.09.2021ம் தேதியகடிதத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களின் 2021–22ம் ஆண்டு சட்ட மன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது மாநகராட்சி / நகராட்சி பகுதிகளில் உள்ள பூங்காக்கள் மேம்பாடு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகராட்சி பகுதிகளில் உள்ள பூங்காக்களை மேம்பாடு செய்யும் பணிகளை மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கையுடன் கருத்துரு சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை **ரூ.இலட்சத்தில்.** |
|---|---|---|
| 1 | திண்டிவனம் நகராட்சியில் அமைந்துள்ள வகாப் நகர் பூங்காவில் நடைபாதை அமைத்தல், சிறுவர் விளையாட்டு சாதனங்கள் அமைத்தல் மற்றும் சுற்று சுவர் அமைக்கும் பணி | 50.00 |
| 2 | திண்டிவனம் நகராட்சியில் அமைந்துள்ள திருவள்ளுவர் நகர் பூங்காவில் நடைபாதை அமைத்தல், சிறுவர் விளையாட்டு சாதனங்கள் அமைத்தல் மற்றும் சுற்று சுவர் அமைக்கும் பணி | 50.00 |
| 3 | திண்டிவனம் நகராட்சியில் அமைந்துள்ள வசந்தபுரம் பூங்காவில் நடைபாதை அமைத்தல், சிறுவர் விளையாட்டு சாதனங்கள் அமைத்தல் மற்றும் சுற்று சுவர் அமைக்கும் பணி | 50.00 |
| | **மொத்தம்** | **150.00** |

திண்டிவனம் நகராட்சி பகுதியில் உள்ள மேற்கண்ட மூன்று பூங்காக்கள் மேம்பாடு செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.150.00 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதி வழங்கக்கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28, அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :– மன்றம் அனுமதிக்கலாம்.

6. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள பின்வரும் அங்கன்வாடி மையங்களில் சிமெண்ட் கான்கிரீட் பணி, மின்சார வசதி அதுதொடர்பான கட்டுமான பணிகள், மின்விசிறி வசதி மற்றும் மின்விளக்கு வசதிகள், பொருட்கள் இருப்பறை வசதி, தரைகளுக்கு டைல்ஸ் பதித்தல் பணி மற்றும் வர்ணம் பூசுதல் பணிகளுக்கு தலா ரூ.200000/- வீதம் 3 பணிகளுக்கு ரூ.600000/-க்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் 2020-2021ன் கீழ் மாவட்ட ஆட்சியர் விழுப்புரம் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.316/அ3/2021 நாள்.29.07.2021ன் மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | அங்கன்வாடி மையத்தின் பெயர் | பணிகள் | தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | காவேரிப்பாக்கம் | 1. சிமெண்ட் கான்கிரீட் பணி,<br>2.மின்சார வசதி அதுதொடர்பான கட்டுமான பணிகள்,<br>3.மின்விசிறி வசதி மற்றும் மின்விளக்கு வசதிகள்,<br>4.பொருட்கள் இருப்பறை வசதி,<br>5.தரைகளுக்கு டைல்ஸ் பதித்தல் பணி வர்ணம் பூசுதல் | 2.00 |
| 2 | சார் ஆட்சியர் குடியிருப்பு சாலை | 1.சிமெண்ட் கான்கிரீட் பணி,<br>2.மின்சார வசதி அதுதொடர்பான கட்டுமான பணிகள்,<br>3.மின்விசிறி வசதி மற்றும் மின்விளக்கு வசதிகள்,<br>4.பொருட்கள் இருப்பறை வசதி,<br>5.தரைகளுக்கு டைல்ஸ் பதித்தல் பணி வர்ணம் பூசுதல் | 2.00 |
| 3 | முருங்கப்பாக்கம் | 1.சிமெண்ட் கான்கிரீட் பணி,<br>2.மின்சார வசதி அதுதொடர்பான கட்டுமான பணிகள்,<br>3.மின்விசிறி வசதி மற்றும் மின்விளக்கு வசதிகள்,<br>4.பொருட்கள் இருப்பறை வசதி,<br>5.தரைகளுக்கு டைல்ஸ் பதித்தல் பணி வர்ணம் பூசுதல் | 2.00 |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி முடிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி செலவினத்தை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

7. இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவு (ம) பொறியியல் பிரிவுகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கும் (உரம் தயாரித்தல்) , குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கும் , கழிவு நீர் அகற்றம் பணிக்கும், அலுவலர்களின் பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப்பட்டு தற்போது பயன்படுத்த இயலாத நிலையில் கழிவு செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ள 10 எண்ணிக்கை வாகனங்களில் அலுவலர்களின் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வந்த TN32V7733 ஈப்பு வாகனத்திற்கு மட்டும் அனுமதி சீட்டு அளிக்கப்பட்டுள்ளதால், மீதமுள்ள 9 வாகனங்களுக்கு நிலுவையிலுள்ள சாலைவரி, பசுமைவரி, ரு.6,01,692/- (ரூபாய் ஆறு இலட்சத்து ஒராயிரத்து அறுநூற்றி தொன்னூற்றி இரண்டு மட்டும்) செலுத்த வேண்டும் என வட்டாரப் போக்குவரத்து அலுவலர், திண்டிவனம் அலுவலகத்திலிருந்து ந.க.எண்.14738/இ1/2021 நாள்.31.08.2021 கேட்பு வரப்பொற்றுள்ளது. மேற்படி தொகையினை வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்த மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகை ரூ.601692/- யை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.1942/2018/எச்1)

8. இந்நகராட்சியில் 1)கண்ரக்கோட்டை தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்தல் பணி மற்றும் 2) காட்ராம்பாக்கம், ரெட்டணை தலைமை நீரேற்றும் நிலையம் மற்றும் இறையானூர் நீருந்து நிலையம் ஆகியவற்றிலிருந்து குடிநீர் விநியோகம் செய்தல் பணிகள் ஒப்பந்தபுள்ளி மூலம் திரு.எஸ்.மோனசுந்தரம், ஒப்பந்ததாரருக்கு ஒப்படைக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், மேற்படி பணிகளின் ஒப்பந்ததாரர் திரு.எஸ்.மோனசுந்தரம் 12.05.2021 அன்று காலமானார்.

இதனால் மேற்கண்ட ஒப்பந்ததாரால் மேற்கொள்ளப்பட்டு வந்த 1)கண்ரக்கோட்டை தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்தல் பணி மற்றும் 2) காட்ராம்பாக்கம், ரெட்டணை தலைமை நீரேற்றும் நிலையம் மற்றும் இறையானூர் நீருந்து நிலையம் ஆகியவற்றிலிருந்து குடிநீர் விநியோகம் செய்தல் பணிகள் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

மேற்கண்ட சூழ்நிலையில் மேற்படி பணிகளுக்கு உடனடியாக ஒப்பந்தப்புள்ளி கோரி வேலை உத்தரவு வழங்க போதிய கால அவகாசம் இல்லாததால் காலஞ்சென்ற திரு.எஸ்.மோனசுந்தரம் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்திலேயே இந்நகராட்சியில் பதிவு பெற்ற திரு.வி.பழனி ஒப்பந்ததாரர் மேற்கண்ட பணிகளை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார்.

எனவே இந்நகராட்சியில் பதிவு பெற்ற திரு.வி.பழனி ஒப்பந்ததாரர் மூலம் 13.05.2021 முதல் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளவும், மேலும் இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி வேலை உத்தரவு வழங்கும்

வரையிலான காலம் வரை பணி மேற்கொள்ளவும், அதற்கான தொகையை திரு.வி.பழனி ஒப்பந்ததாரருக்கு குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி சட்டப்பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு : –

1. மன்றம் பதிவு செய்யலாம்,
2. மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி சட்டப்பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

9. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் தொலைபேசி செய்தியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், நகர்புற வளர்ச்சி மற்றும் குடிநீர் வழுங்கல் துறை அமைச்சர் அவர்களின் 24.08.2021ம் தேதிய சட்ட மன்ற கூட்டத் தொடரில் நகராட்சி பகுதிகளில் பராமரிக்கப்படும் பொது கழிவறைகளை மேம்பாடு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் திண்டிவனம் நகராட்சி பகுதியில் கீழ்க்காணும் பொது கழிவறைகளை நவீன முறையில் மேம்பாடு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்திராகாந்தி பேருந்து நிலைய பொது கழிவறையினை மேம்பாடு செய்தல் பணி | 4.40 |
| | **மொத்தம்** | **4.40** |

மேற்காணும் விவரப்படி உள்ள பொது கழிவறைகளை நவீன முறையில் மேம்பாடு செய்வதற்கு விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்பிக்கவும். ரூ.4.40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது கழிவறைகளை நவீன முறையில் மேம்பாடு செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.40 இலட்சத்திற்கு முழுமான்யமாக பெற கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4206/இ1/2021)

10. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் தொலைபேசி செய்தியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், நகர்புற வளர்ச்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் 24.08.2021ம் தேதிய சட்ட மன்ற கூட்டத் தொடரில் நகராட்சி பகுதிகளில் பராமரிக்கப்படும் சமுதாய கழிவறைகளை மேம்பாடு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் திண்டிவனம் நகராட்சி பகுதியில் கீழ்க்காணும் சமுதாய கழிவறைகளை நவீன முறையில் மேம்பாடு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ஆர்.சி காம்பவுண்ட் சமுதாய கழிவறையினை மேம்பாடு செய்தல் பணி (வார்டு எண்.18) | 4.50 |
| 2 | ஆர்.எஸ்.பிள்ளை தெரு சமுதாய கழிவறையினை மேம்பாடு செய்தல் பணி (வார்டு எண்.27) | 4.30 |
| | **மொத்தம்** | **8.80** |

மேற்காணும் விவரப்படி உள்ள கழிவறைகளை நவீன முறையில் மேம்பாடு செய்வதற்கு விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்பிக்கவும். ரூ.8.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. சமுதாய கழிவறைகளை நவீன முறையில் மேம்பாடு செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8.80 இலட்சத்திற்கு முழுமான்யமாக பெற கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4206/இ1/2021)

11. நகராட்சி நிர்வாக இயக்குநர், செனனை–28, அவர்களின் ந.க.எண்.14006/2021/தி2–2 நாள்.08.09.2021ம் தேதியகடிதத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களின் 2021–22ம் ஆண்டு சட்ட மன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது மாநகராட்சி / நகராட்சி பகுதிகளில் உள்ள நீர் நிலைகள் மேம்பாடு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகராட்சி பகுதிகளில் உள்ள நீர் நிலைகள் மேம்பாடு செய்யும் பணிகளை மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கையுடன் கருத்துரு சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில். |
|---|---|---|
| 1 | திண்டிவனம் நகராட்சி அய்யந்தோப்பு பகுதியில் உள்ள அய்யன் குளம் தூர்வாரி கரைகளை பலப்படுத்தி நடைபாதை அமைக்கும் பணி (வார்டு எண்.2) | 50.00 |
| | **மொத்தம்** | **50.00** |

திண்டிவனம் நகராட்சி பகுதியில் உள்ள மேற்கண்ட நீர் நிலைகள் மேம்பாடு செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.50.00 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதி வழங்கக்கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28, அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:–

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 4206/இ1/2021/இ1

தனி அலுவலர் (ம) ஆணையாளர்
திண்டிவனம் நகராட்சி.